Poompuhar
Hand in hand with our artisans...

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**
**759, அண்ணா சாலை, சென்னை–600 002.**

தொலைபேசி : 28521271, 28521325
28521798, 28525094

**பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது தேர்வு**
2022–2023

விண்ணப்ப படிவம்

புகைப்படம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கைவினைஞரின் பெயர்<br>1) தமிழ்<br>2) ஆங்கிலம் | | : | |
| 2. | தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் | | : | |
| 3. | (அ) முழு விலாசம் (அஞ்சல் எண்ணுடன்) | | : | |
| | (ஆ) தொலைபேசி எண்/கைபேசி எண் | | : | |
| 4. | பிறந்த தேதி மற்றும் வயது | | : | |
| 5. | கல்வித் தகுதி | | : | |
| 6. | ஆதார் எண். | | : | |
| 7. | வங்கிக்கணக்கின் முதல் பக்கம் | | : | |
| 8. | தொழில்கல்வி குறித்த விவரங்கள் அல்லது பாரம்பரிய முறையில் / குருகுல முறையில் தொழில் கற்ற விபரம் | | : | |
| 9. | கைவினைஞர் செய்து வரும் கைத்திறத் தொழிலின் பெயர் | | : | |
| 10. | இந்தத் துறையில் அனுபவம் (எத்தனை ஆண்டுகள்) | | : | |
| 11. | இத்துறையில் கைவினைஞரின் சேவை | | : | |
| | அ) | தாங்கள் தயாரித்த பொருட்களில் மிகச் சிறந்த பொருட்கள் என பாராட்டுப் பெற்றவை ஏதேனும் இருப்பின் ஆதாரங்களுடன் | : | |
| | ஆ) | கலந்துக்கொண்ட கண்காட்சிகளின் விவரங்கள் | : | |
| | இ) | எந்தெந்த நிறுவனங்களுக்குப் பொருட்கள் சப்ளை செய்யப்பட்டது | : | |
| | ஈ) | அயல்நாடுகளுக்கு ஏதேனும் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளதா? | : | |

| | | | | |
|---|---|---|---|---|
| | உ) | புதியதாக பொருளை உருவாக்கும் திறன் படைத்தவரா? | : | |
| | ஊ) | இந்தக் கைத்திறத் தொழிலின் வளர்ச்சிக்கு கைவினைஞர் ஆற்றிய பணிகள்/மேற்கொண்ட பயிற்சி வகுப்புகளின் விவரங்கள் | : | |
| | எ) | மாநில, தேசிய அல்லது வேறு ஏதேனும் விருது பெற்றவரா? (இருப்பின் அதன் விவரங்கள்) | : | |
| | ஏ) | கைவினைஞரின் பணிகள் குறித்த நாளிதழ், வார மற்றும் மாத இதழ்களில் கட்டுரை வந்திருந்தால் அதன் விவரங்கள் | : | |
| 12. | அ) | விருதுத் தேர்வுக்கு தயாரித்து அளித்துள்ள பொருட்களின் பெயர்கள் | : | |
| | | | : | 1. |
| | | | : | 2. |
| | ஆ) | மேற்படி பொருட்களை தயார் செய்வதற்கு எடுத்துக் கொண்ட கால அவகாசம் | | |
| | இ) | அதன் விலை விவரங்கள் | : | |
| | ஈ) | இந்த பொருள் கைவினைஞரால் சொந்த முயற்சியில் தயார் செய்யப்பட்டதா? அல்லது வேறு யாராவது உதவியுடன் தயார் செய்யப்பட்டதா? | : | |
| | உ) | இந்த பொருட்களை குறித்து விரிவான தகவல் (ஏதேனும் இருப்பின்) | : | |
| 13. | பொருள் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளதா? | | : | |
| 14. | தேர்வுக்கு கொடுக்கப்படும் பொருட்களின் புகைப்படம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளதா? | | : | ஆம் / இல்லை |
| 15. | இதர விவரங்கள் (ஏதேனும் இருப்பின்) | | : | |

கைவினைஞரின் கையொப்பம்

புகைப்படம்
(பரிந்துரை அலுவலர்
கையெழுத்துடன்)

## பரிந்துரைச் சான்றிதழ்

1. திரு/திருமதி/செல்வி.......................................................................................................... அவர்களால் 2022-23ஆம் ஆண்டிற்கான பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதுக்காக அளிக்கப்பட்ட பொருள் / பொருட்கள் .......................................................................... (கைத்திறன் தொழில் பெயர்) ......................................................................(கைவினைப் பொருட்களின் பெயர்) அவரால் சொந்தமாக தயார் செய்யப்பட்டது என்றும்,

2. மேற்படி கைவினைஞரது தொழிற்கூடத்தில், அவர் மேற்படி கைவினைப் பொருட்களை தயாரிப்பது என்னால் நேரடியாக பார்வையிடப்பட்டு உறுதி செய்யப்பட்டது என்றும்,

3. இதற்காக ரூ.20/- (ரூபாய் இருபது மட்டும்) மதிப்புள்ள முத்திரைத்தாளில் முதல் நிலை குற்றவியல் நீதிபதி அல்லது சான்றுறுதி அலுவலர் (Notary Public) முன்னிலையில் உறுதி வாக்கு மூலம் பெற்று இணைக்கப்பட்டுள்ளது என்றும்,

4. மேற்கண்ட கைவினைஞரை ................ ஆண்டுகளாக நன்கு தெரியும் என்றும்,

5. கீழே காணப்படும் கையொப்பம் மேற்கண்ட கைவினைஞரால் என் முன்னால் கையொப்பமிடப்பட்டது என்றும் இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.

கைவினைஞரின் கையொப்பம்

பரிந்துரை செய்யும்
அலுவலரின் பெயர்
அலுவலக முத்திரையுடன்

நாள் :

இடம் :

### குறிப்பு

பூம்புகார் விற்பனை நிலைய மற்றும் உற்பத்தி நிலைய மேலாளர்கள் / புதுடெல்லி அபிவிருத்தி ஆணையர் அலுவலகத்தைச் சார்ந்த அந்தந்த பகுதி உதவி இயக்குநர்கள் (கைத்திறன்) / கிராப்ட் கவுன்சில் (தமிழ்நாடு/இந்தியா/உலகம்) ஆகிய யாராவது ஒருவரால் புகைப்படத்தில் கையொப்பமிட்டு பரிந்துரை செய்யப்படவேண்டும்.

**ரூபாய் 20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் பூம்புகார் மாவட்ட விருது போட்டியில் கலந்துகொள்ளும் கைவினைஞர் அளிக்கவேண்டிய உறுதி மொழி பத்திரம்**

(சான்றுறுதி அலுவலர் (Notary Public) கையொப்பம் மற்றும் முத்திரையுடன்)

திரு/திருமதி/செல்வி.........................................................த/பெ................................ ஆகிய நான் 2022-23 ஆம் ஆண்டு பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதுக்காக என்னால் வைக்கப்பட்டிருக்கும் கைவினைப் பொருள்.................................... (கைத்திறன் தொழில் பெயர்), ...........................................................................................(கைவினைப் பொருட்களின் பெயர்) என்னால் செய்து முடிக்கப்பட்டது என்று உறுதி அளிக்கிறேன். இக்கைவினைத் தொழிலை நான் .............. வருடங்களாக செய்து வருகிறேன். இதுவரையிலும் நான் பூம்புகார் மாவட்ட விருது பெறவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

மேற்கூறப்பட்டுள்ள என்னுடைய உறுதிமொழி மற்றும் விண்ணப்பத்திலுள்ள தகவல்கள் தவறு என நிரூபிக்கப்பட்டால், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் என்மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளலாம் எனவும், மேலும் இவ்விருது தேர்வுமுறை குறித்து இந்நிறுவனத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன் எனவும் இதன்மூலம் உறுதி அளிக்கின்றேன்.

இத்துடன் 2022-23ஆம் ஆண்டு பூம்புகார் மாவட்ட விருது தேர்வுக்காக வைக்கப்பட்டிருக்கும் மேற்குறிப்பிட்டுள்ள கைவினைப்பொருளுக்கு, தேர்வு தொடர்பான நடவடிக்கைகளினாலோ மற்றும் போக்குவரத்தினாலோ சேதாரம் ஏதும் ஏற்பட்டால் இது எனது சொந்த பொறுப்பில் ஏற்பட்டதாக ஏற்றுக்கொள்கிறேன் என்று உறுதியளிக்கிறேன்.

பெயர் :

விலாசம் :

கைவினைஞரின்
கையொப்பம் :

தேதியுடன் :

/சான்றளிக்கப்படுகிறது/

NOTARY PUBLIC
SIGNATURE WITH SEAL

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**759, அண்ணா சாலை, சென்னை–600 002.**

## பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது தேர்வுக்கான விதி முறைகள்

1. தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களின் கைத்தொழில் திறமையினை வெளிக் கொணர்ந்து அவர்களை கௌரவித்து பாராட்டுக்கள் வழங்கவும் மேலும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதினை 2011–12 ஆண்டு முதல் வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டு 2022–23ஆம் ஆண்டு விருதிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. இவ்விருதில் 85 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தலா ரூ.10,000/– ரொக்க பரிசு, ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழும் அளிக்கப்படும்.

3. கீழ்க்கண்ட 16 கைத்திறத் தொழில்களில், முதல் 15 கைத்திறத் தொழில்களில் தலா 5 கைவினைஞர்களுக்கு (ஒரு பெண் கைவினைஞர் உட்பட) மேற்படி விருது வழங்கப்படும். வரிசை எண் 16ல் உள்ள இதர கைவினைப் பொருட்களில் 2 பெண் கைவினைஞர்கள் உட்பட 10 கைவினைஞர்களுக்கு இந்த விருது வழங்கப்படும்.
   1. பஞ்சலோக சிலைகள் 2. பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள் 3. தஞ்சாவூர் ஓவியங்கள் 4. தஞ்சாவூர் கலைத்தட்டுகள் 5. மரச்சிற்பங்கள் 6. கற்சிற்பங்கள் 7. சுடு களிமண் 8. கலம்காரி பத்திக் மற்றும் அப்ளிக் வேலைகள் 9. காகிதக்கூழ் பொம்மைகள் 10. பாய் நெசவு 11. மூங்கில் மற்றும் பனைஓலை பொருட்கள் 12. நெட்டி வேலைப்பாடு 13. நார்பொருட்கள் 14. கோவில் நகைகள் 15. சித்திரத் தையல் வேலை மற்றும் 16. இதர கைவினைப் பொருட்கள்.

4. ஏற்கனவே பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது பெற்றவர்கள் திரும்பவும் கலந்து கொள்ளக் கூடாது.

5. கைவினைஞர்களின் அனுபவம் மற்றும் அவர் தம் தொழிலில் ஆற்றியுள்ள சேவை மற்ற சிறப்பு அம்சங்களும் தேர்ச்சியின்போது கவனத்தில் கொள்ளப்படும்.

6. தமிழ்நாட்டைச் சேர்ந்த கைவினைஞர்கள் மட்டுமே இத்தேர்வில் கலந்துக்கொள்ளலாம்.

7. தேர்வில் கலந்துக்கொள்ளும் கைவினைஞர்கள் விண்ணபத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களை கண்டிப்பாக இணைத்து குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்ப வேண்டும்.
   அ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தில் ஒட்டிய புகைப்படத்துடன் விண்ணபதாரரின் மற்றொரு புகைப்படமும் இணைக்கப்பட வேண்டும்.
   ஆ) பரிந்துரைச் சான்றிதழில் கீழ்க்கண்டுள்ள விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். (கைத்திறன் தொழில் பெயர் மற்றும் கைவினைப் பொருட்களின் பெயர்)
   உதாரணம் :
   கைத்திறன் தொழில் பெயர் : பஞ்சலோக சிற்பம் / மரச்சிற்பம்,
   கைவினைப் பொருட்களின் பெயர் : விநாயகர் / நடராஜர் / வேணுகோபால்
   இ) இருபது ரூபாய் முத்திரைத்தாளில் கைவினைஞரின் உறுதிமொழி பத்திரம், முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி அல்லது சான்றுறுதி அலுவலர் (Notary Public) கையொப்பத்துடன் (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது).
   ஈ) தேர்வுக்கு வைக்கப்பட வேண்டிய கைவினைப் பொருள் மற்றும் அதன் புகைப்படம்.
   உ) இருப்பிட முகவரிக்கான அத்தாட்சி (குடும்ப அட்டை/ வாக்காளர் அடையாள அட்டை/ ஓட்டுநர் உரிமம்/ ஆதார் கார்டு/புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகம்) ஆகியவற்றின் ஏதாவது ஒன்றின் நகல்.

8. **விருதுக்கான பொருள் போட்டி தொடர்பான நடவடிக்கையினால் சேதம் அடைந்தால் அதற்கு நிர்வாகம் பொறுப்பேற்காது. அதற்கான நஷ்ட ஈடும் வழங்காது.**

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மாதிரிப்பொருட்கள் மேற்கண்டுள்ள பூம்புகார் தலைமை அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டிய **கடைசி நாள் 05.05.2023** (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி வரை (அலுவலக நாட்கள் – திங்கள் முதல் வெள்ளி வரை).